முருகப்பெருமான் துணை

**மகான் சிவயோகமாமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.11.2022, வியாழக்கிழமை

1. வாழும் காலமே உலக மக்கள்
வரமாக வைகுண்ட பலனடைய
நாளும் நாளும் அன்னதானமுடன்
ஞானிகள் பூசைக்கு வழிகாட்டியருளும்
2. அருளும் ஆறுமுக அரங்கனே
அண்ணலே உன் பெருமை கூறி
அருளுவேன் சுபகிருது துலை திங்கள்
அறுநான்கு திகதி வேந்தன் வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 24 ம் நாள் 10.11.2022, வியாழக்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசிதனை
வழங்குவேன் சிவயோகமாமுனிவர் தானும்
சோரமின்றி கலியுக மக்களுக்கு
சுத்த சைவ றெிதனை காட்டும்
4. காட்டும் அரங்கன் திருநாமத்தை
கலியினில் தொடர் செபதபமாக
வாட்டமறச் செய்து வருக
வசமாகும் சகல காரிய சித்தி
5. சித்திகளுடன் சித்தம் தெளிவும்
சிந்தனையில் புதுமை கூடி
யுத்தமெனும் உலக மாற்றத்தில்
உயர்வாய் சேவை ஆற்றி உலகோர்
6. உலகோர் தன்னிலை உயர்த்தி
உண்மை நிறைந்த சமூகத்தை
உலகமெங்கிலும் நிலை நிறுத்தி
உலகமாற்றம் செய்யும் வண்ணம்
7. வண்ணமுடன் ஞான சபை படைப்பர்
வணங்கிப் பேருலகம் தன்னில்
எண்ணமெல்லாம் வேலவன் வழிபாடு
எங்கும் நடந்திட வகை செய்து
8. செய்துமே ஞானவான்கள் எனும்
சிறந்த நிலை கண்டுத் தேறி
மெய்யான வாழ்வின் சூட்சுமம்
மேலவர்களின் ஆசி அருட்தயவும்
9. தயவும் கண்டுத் தேறி
தன்னார்வத் தொண்டு சிறந்திட
தயவாக வாழ்ந்து உலகினில்
தணிகாசலன் தலைமை ஏற்று

10. ஏற்றுமே கலியிடர் போக்கி
எங்கும் ஞானயுக மாற்றம்
ஆற்றல்பட படைத்துச் சிறப்பர்
அரங்கன் அவதாரம் தன்னை

11. தன்னையே உலகம் அறிந்திட
தனிப்பெருங்கருணை வடிவாக
அண்ணலாக அவரவரும் மாறியே
அற்புதம் படைப்பர் உலகினில்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—